## மகளிர் பக்கம்

# அகல்விளக்கு செய்யலாம் வாங்க...



வணக்கம்! என் அன்பிற்குரிய வாசக வாசகிகளே. கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை தீபம் என்றாலே நம் நினைவிற்கு வருவது அகல்விளக்குதான். அந்த மாதத்தில் வீடுகள்தோரும் அகல் விளக்குகள் ஒளிவீசும். கார்த்திகை மாதத்தில் மட்டுமல்லாமல், சில வீடுகளில் தினம்தோறும் அகல்விளக்கு ஏற்றும் வழக்கம் உள்ளது. இது நம் தமிழகத்தின் கலாச்சாரமாகவும் இருந்து வருகிறது. அகல்விளக்கு ஏற்றுவது ஒரு வழக்கமாக மட்டுமில்லாமல், அது ஏற்றப்படுதவற்கான காரணமும் கூறப்படுகிறது. மனரீதியாக அகல்விளக்கினை ஏற்றும்போழுது நம் மனதிற்குள் ஏதோ ஒரு மகிழ்ச்சியும், மனஅமைதியும் கிடைக்கும் என்பார்கள். அதனால் என் அன்பான வாசக, வசகிகளே அகல்விளக்குச் செய்முறையை கற்றுக்கொண்டு, உங்கள் வீடுகளில் அகல்விளக்கினை ஏற்றி மகிழுங்கள்.

தேவையான பொருட்கள்:

அகல்விளக்கு செய்யும் முறையை கற்றுக்கொள்வதால், நம் வீடுகள் மட்டும் பளிச்சிடாமல், நம் வாழ்க்கையும் பளிச்சிடும். நம் வாழ்க்கைக்குத் தேவையான பொருளாதாரத்தினை பெருக்கிக் கொள்ளலாம். படத்தில் காட்டியபடி 'எம்சீல்' பாக்கெட், தேவையான வண்ணங்கள் (பேப்ரிக் பெயிண்ட்), பிரஷ், பெவிகால், ஒருகூர்மையான பென்சில், வார்னிஷ், சிறிது சாக்பவுடர் இவையெல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள். அடுத்து அகல்விளக்கின் செய்முறையைப் பார்ப்போம்.

**அறிவிப்பு!**

**இதய அலைகளின் முன்னோக்கிய பாய்ச்சலில் ஏற்பட்ட சிறு சறுக்கலினால் இரண்டு மாத இதழ்கள் வெளிவராமல் போனதற்கு சந்தாதாரர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம்.**

- நிர்வாகம்.

செய்முறை:

வெள்ளைநிற களிமண் அல்லது கருப்பு நிற களிமண்ணை (Clay) மூலமாக அகல்விளக்கு ஒன்றினை தயாரித்துக் கொள்ளவேண்டும். சிறிது நேரம் உலரவிட்டு அதன்பின், அந்த அகல்விளக்கினை நன்றாக துடைத்துவிட்டு அதன்மேல் வெள்ளைநிற வண்ணம் (எந்த நிறம் நீங்கள் அடிக்க விரும்புகிறீர்களோ அதை) பூச வேண்டும். வர்ணம் பூசி முடித்தவுடன் அதை சிறிது நேரம் காய வைக்கவேண்டும். களிமண் இரண்டு நிறத்தில் இருக்கும். அதில் ஏதாவது ஒரு நிறத்தினை எடுத்துக்கொண்டு சிறு உருண்டையாக உருட்டிக்கொள்ளவேண்டும். அந்த உருண்டையை சிறிது காயவைத்தப் பிறகு, அதனை உள்ளங்கையில் வைத்து உருட்டிக் கொள்ளவேண்டும். அந்தச்சுருளை, அகல்விளக்கின் மேல் ஒட்டவேண்டும். அந்தச் சுருளானது ரோஜா வடிவத்தில் இருக்கவேண்டும். மீண்டும் களிமண்ணை எடுத்து மூன்று சிறு உருண்டைகளை இலை வடிவத்தில் செய்து ரோஜாவின் பக்கத்தில் ஒட்டவேண்டும். ஒட்டிய பிறகு, 20 நிமிடங்கள் காய வைக்கவேண்டும்.

நிறங்களில் நிறைய வண்ணங்கள் உள்ளன. இந்த வண்ணங்களில் எந்த நிறத்தை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். நான் ரோஜாவிற்குச் சிகப்பு நிறத்தைப் பயன்படுத்தி உள்ளேன். சிகப்பு நிறத்திற்குப் பதிலாக மஞ்சள் நிறம் அல்லது வேறு எந்த நிறத்தை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அடர்த்தியானப் பச்சையையும், லேசான பச்சையையும் ஒன்றாகக் கலந்து இலைகளுக்கு வண்ணம் தீட்டியுள்ளேன். வண்ணம் தீட்டியப் பிறகு



10 நிமிடங்கள் காயவைக்கவேண்டும். அகல்விளக்கினைச்சுற்றி வெள்ளை நிறத்தில் வண்ணம் தீட்டியுள்ளேன். வேண்டுமானால் தங்க நிறத்தையோ அல்லது வேறு எந்த நிறத்தையோ பயன்படுத்திக் கொள்ளலாம். இப்பொழுது கண்களைப் பறிக்கும் அகல்விளக்குத் தயாராகிவிட்டது.

இந்த அகல்விளக்கானது, காண்பதற்கு அழகாக மட்டுமில்லாமல், குடும்பத்தின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் உதவியாக உள்ளது. நான் இந்த அகல்விளக்கினை பொழுதுபோக்கிற்காக செய்தாலும், மாதம் குறைந்தபட்சம் ரூ.2,000 முதல் ரூ.5,000 வரை என்னால் சம்பாதிக்க முடிகிறது. இந்த அகல் விளக்குகளை என் நண்பர்களிடமே விற்று எனக்குத் தேவையான வருமானத்தை ஈட்டிக் கொள்கிறேன். அதனால் குடும்ப விளக்குகளாகத் திகழும் பெண்மணிகளே இந்த அழகிய அகல்விளக்கினைச் செய்து வருமானத்தை ஈட்டிக் கொள்ளுங்கள்.

மிக எளிய செய்முறைமூலம் செலவில்லாத பொருட்களைக் கொண்டு தயாரிக்கும் விளக்குகளை, கோயில் அருகாமையிலுள்ள கடைகளுக்குச்சென்று விற்கலாம். மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நிதியினைப் பெற்று விற்பதற்கு ஏற்பாடு செய்யலாம். அகல் விளக்கு மட்டுமின்றி, விதவிதமாக விளக்குகளை உங்களது கற்பனைத் திறத்திற்கு ஏற்பச் செய்து விற்பனைப் போட்டியினைச் சமாளிக்கலாம். எண்ணெய் உறிஞ்சக்கூடிய மண் விளக்குகளைவிட, ?? மூலம் செய்யப்படும் விளக்குகளுக்கு மார்க்கெட்டில் நிறைய சந்தை வாய்ப்பு உள்ளது. வாசகிகளே நான் கொடுத்துள்ள செய்முறை விளக்கத்தினை வைத்து விளக்குகளைச் செய்யுங்கள், அடுத்த இதழில் வேறு ஒரு செயல்முறையுடன் உங்களைச் சந்திக்கிறேன்.

**ஜெயமாலா**